**News Coverage**

Tamil Murasu
09 July 2023, Sunday
Page 2



## செய்திக் கொத்து

### சிறுசிறு வேலைகளைப் பார்க்கும் முதியோர்

தை ஹுவா குவான் மாரல் சாரிட்டிஸ் (டிஹெச்கேஎம்சி) என்ற அமைப்பு நிர்வகித்து நடத்தும் முதுமையில் இளமை நிலையங்கள் கொடுக்கும் சிறுசிறு வேலைகளை 47 முதியவர்கள் பார்த்து வருகிறார்கள். உணவுப்பொருளைக் கொண்டுபோய்க் கொடுப்பது, எப்போது என்ன மருந்தைச் சாப்பிட வேண்டும் என்பது பற்றி இதர முதியோருக்கு நினைவூட்டுவது போன்ற எளிமையான சமூக அடிப்படையிலான வேலைகளை அவர்கள் பார்க்கிறார்கள்.

இப்படி அவர்கள் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் $1 ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். சிங்கப்பூர் முழுவதும் உள்ள குடியிருப்புப் பேட்டைகளில் முதுமையில் இளமை நிலையங்கள் அமைந்து இருக்கின்றன. அவை முதியோருக்கு உதவி வருகின்றன.

<u>Summary of the news article</u>

**Micro jobs scheme for seniors in active ageing centres**

THKMC launched the micro jobs scheme for seniors to participate in simple community-based tasks like delivering meals and medicine reminders for other seniors. 47 seniors from active ageing centres participated in this initiative and they receive incentive for the tasks assigned.